
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1283

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

---


# உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

171

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த **பி.சி.சுப்பிரமணியம்** அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# அரசுப் பணியிலிருந்து கழகப் பணிக்கு... பி.சி.சுப்பிரமணியம்



ஓவியம் : ரவி பேலட்

“கழகத்திற்காகத் தன்னையே அர்ப்பணித்தவர்கள் சிலர். அவர்களில் ஒருவர், பி.சி.” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அன்போடு அழைத்து, உரிமை கொண்டாடிய உடன்பிறப்பு. ‘பேறறிஞர் அண்ணா அவர்களின் அழைப்பை ஏற்று, அரசுப் பணியையே துறந்து, வாழ்நாள் முழுவதும் கழகத்துக்காக உழைத்த கொள்கை மறவர், இராணிப்பேட்டை மண்ணின் பெருமை’ என மாவட்டக் கழகத்தினர் போற்றும் அன்பு உடன்பிறப்பு, பி.சி.சுப்பிரமணியம். மாவட்டக் கழகத்தினர் பி.சி. என்றால், எளிதாக அறிவர்.

1929-ஆம் ஆண்டு, அன்றைய வட ஆற்காடு மாவட்டம், இன்றைய தனி மாவட்டமான இராணிப்பேட்டையின் அருகிலுள்ள காரை என்கிற பகுதியில் பிறந்த பி.சி.சுப்பிரமணியம் அவர்கள், சிறுவயதிலேயே தந்தை பெரியார் அவர்களின் சுயமரியாதைச் சிந்தனைகளாலும், பேரறிஞர் அண்ணா அவர்களின் அரசியல் உரைகளாலும் ஈர்க்கப்பட்டவர். வடஆற்காடு மாவட்டம் முழுவதும் திராவிட இயக்கம் வேரூன்றத் தொடங்கிய காலத்திலேயே, செயல்வீரராகக் கழகப் பணியில் இணைந்து, கிராமம்தோறும் கொள்கைப் பரப்புரையில் ஈடுபட்டவர்.

கழகத்தின் தொடக்ககாலத்தில் வட ஆற்காடு மாவட்டம், இயக்கத்தின் முக்கிய அரசியல் களமாக இருந்ததை அறிவோம். காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர் பகுதிகள் அந்த எழுச்சியின் மையங்களாக இருந்தன. அந்த வகையில் சி.வி.எம். அண்ணாமலை, புலவர் கோவிந்தன், ப.உ.சண்முகம், மா.பா.சாரதி என முன்னோடிகள் வரிசையில், இராணிப்பேட்டை ஆற்காடு பகுதிகளில் மக்களிடையே கழகக் கொள்கைகளைக் கொண்டுசென்ற முன்னோடியாக இருந்தவர் பி.சி.சுப்பிரமணியம். ‘தெருமுனைப் பிரச்சாரங்கள்’, ‘பொதுக்கூட்ட ஏற்பாடுகள்’, ‘சுவரொட்டிப் பணிகள்’, ‘கழக அமைப்பு விரிவாக்கம்’ என ஒவ்வொரு பணியிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்.

1957-ஆம் ஆண்டு மற்றும் 1962-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல்கள்தான், கழகத்தைத் தவிர்க்க முடியாத அரசியல் சக்தியாக, மக்கள் பேரியக்கமாக மாற்றின. அந்த வெற்றிகளுக்கான அடித்தளத்தை அமைத்த மாவட்டங்களில் வட ஆற்காடும் குறிப்பிடத்தக்கது. வேலூர், இராணிப்பேட்டை, ஆற்காடு, குடியாத்தம் உள்ளிட்ட பகுதிகளில் கழக அமைப்பை வலுப்படுத்தவும், வீட்டுக்கு வீடு உதயசூரியன் சின்னத்தை மக்களிடம் கொண்டுசேர்க்கவும், தேர்தல் களப்பணிகளை ஒருங்கிணைக்கவும் பாடுபட்ட செயல்வீரர்களில் ஒருவர் சுப்பிரமணியம். இன்றைய இராணிப்பேட்டை மாவட்டத்தைக் கழகத்தின் கோட்டையாக மாற்றியவர்களில் ஒருவர்.

## அண்ணாவின் அழைப்பு

படித்து முடித்துவிட்டு, அரசுப் பணியில் இருந்தாலும், அவரது எண்ணமெல்லாம் கழகப் பணியிலேயே இருந்தது. அதனை அறிந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், நேரடியாக அழைத்து, ‘அரசுப் பணியை விட்டுவிட்டு கழகப் பணியில் முழுநேரமாக ஈடுபடவும்’ எனக் கூறியுள்ளார். அண்ணாவின் பேச்சுக்கு மறுபேச்சில்லாமல், எந்தத் தயக்கமும் இன்றி, தனது அரசுப் பணியைத் துறந்து, முழுநேரமாகக் கழகப் பணியில் ஈடுபடுத்திக்கொண்டார். தனது இலட்சியத்திற்காக எதிர்காலத்தையே அர்ப்பணித்தவராகத் திகழ்ந்தவர்.

1953-ஆம் ஆண்டு மும்முனைப் போராட்டம், 1957-ஆம் ஆண்டு கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் என அனைத்து போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவர். 1965-ஆம் ஆண்டு, இந்தித் திணிப்பை எதிர்த்து, தமிழ்நாடு முழுவதும் மாணவர்கள் போராட்டம் தீவிரமடைந்தபோது, ராணிப்பேட்டையில் அந்த போராட்டங்களை ஒருங்கிணைத்தவர்களில் முக்கியமானவர். இந்தி எதிர்ப்பு சட்டநகல் எரிப்புப் போராட்டத்தில் கைதாகி, வேலூர் சிறையில் பேரறிஞர் அண்ணாவுடன் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பின்னர், கலைஞர் மீது மாறாத அன்பும், கழகப் பற்றும் கொண்டவராக இருந்தவர்.

1975-ஆம் ஆண்டு, நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டபோது, கழகத்தின் முன்னணித் தலைவர்களும் செயல்வீரர்களும் கைதானதுடன், அஞ்சாமல் உறுதியுடன் நின்று கழகம் காத்தனர். அந்த அடக்குமுறைக்கும் மிரட்டல்களுக்கும் அஞ்சாமல், மிசா கைதியாகச் சிறைத் தண்டனை அனுபவித்தார், சுப்பிரமணியம்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர், நாவலர் ஆகியோருடன் நெருங்கிய நட்பு வட்டத்தில் இருந்து, அவர்களின் அன்பையும் நம்பிக்கையையும் பெற்றவர். குறிப்பாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், இவரது முழுப்பெயரையும் சொல்லி அழைக்காமல், ‘பி.சி.’ என்றே அழைப்பாராம். அந்த அன்பழைப்பு, சுப்பிரமணியன் அவர்களின் கொள்கை உறுதிக்குக் கிடைத்த உயரிய மதிப்பாகும்.

காரை கிளைக் கழகத்தில் தொடங்கியது அவரது பயணம். 1962-ஆம் ஆண்டு முதல் 1976-ஆம் ஆண்டு வரை இராணிப்பேட்டை நகரச் செயலாளர், 1976-ஆம் ஆண்டு முதல் 1980-ஆம் ஆண்டு வரை மாவட்டப் பிரதிநிதி, 1976-ஆம் ஆண்டு முதல் 1987-ஆம் ஆண்டு வரை இராணிப்பேட்டை நகர மன்ற உறுப்பினர், 1983-ஆம் ஆண்டு முதல் 1987-ஆம் ஆண்டு வரை இராணிப்பேட்டை நகர மன்றத் துணைத் தலைவராகப் பொறுப்பேற்று, நகர வளர்ச்சிக்கும் மக்கள் நலனுக்கும் சிறப்புடன் தொண்டாற்றினார். 1987-ஆம் ஆண்டு முதல் அவரது இறுதி மூச்சு வரை இராணிப்பேட்டை நகரக் கழக அவைத் தலைவராக இருந்து, கழகத்தின் மூத்த வழிகாட்டியாகவும், அனைவரின் மரியாதையையும் பெற்ற தலைவராகவும் திகழ்ந்தார்.

தேர்தல் பணி, தலைமைக் கழகம் அறிவிக்கும் போராட்டம், கொள்கைப் பரப்புரைப் பணிகள் என எதுவாக இருந்தாலும், இராணிப்பேட்டையில் முதலில் களத்தில் நிற்பவர் பி.சி.தான் என்ற நம்பிக்கையை மாவட்டக் கழகத்தினர் கொண்டிருந்தனர்.

கழகத்தின் மீதான அவரது பற்றை, அவரது குடும்ப வாழ்க்கையிலும் காண முடியும். நாவலர் அவர்களின் நினைவாக மூத்தமகனுக்கு ‘செழியன்’, தலைவர் கலைஞர் அவர்களின் நினைவாக, ‘கருணாநிதி’ எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தவர். 1986-ஆம் ஆண்டு தனது மகன்கள் செழியன் மற்றும் கருணாநிதி ஆகியோரின் சீர்திருத்தத் திருமணங்களை நடத்த, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையே இராணிப்பேட்டைக்கு அழைத்துவந்து, ‘ஜெயம்’ திரையரங்கில் திருமண விழாவை நடத்தினார். சுயமரியாதைத் திருமணக் கொள்கையை வாழ்விலும் நடைமுறையிலும் நிலைநாட்டிய நிகழ்வு, அவரது கொள்கைப் பற்றுக்குச் சான்றாக உள்ளது.

தந்தையின் வழியில் அவரது குடும்பமும் கழகப் பணியைத் தொடர்ந்து வருகிறது. மூத்த மகன் செழியன், இராணிப்பேட்டை நகரக் கழகச் செயலாளராக, ஏழு ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றியதுடன், தற்போது இராணிப்பேட்டை மாவட்ட இலக்கிய அணி துணைத் தலைவராகவும், தி.மு.க. தலைமைக்கழகப் பேச்சாளராகவும் பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

கழகப் பணிகளில் சோர்வின்றி இயங்கி வந்த சுப்பிரமணியம், 1995-ஆம் ஆண்டு ஜூலை 28-ஆம் தேதி இயற்கை எய்தினார். தனது இறுதி மூச்சுவரை தி.மு.க. என்ற மூன்று எழுத்தையே தனது உயிர்மூச்சாகக் கொண்டு வாழ்ந்த கொள்கை மறவராக இன்றும் இராணிப்பேட்டையில் நினைவு கூரப்படுகிறார் சுப்பிரமணியம். அன்றைய ஒருங்கிணைந்த வட ஆற்காடு மாவட்டத்தின் கழக வரலாற்றை திரும்பிப் பார்க்கையில், களத்தில் கொடியைத் தாங்கிய செயல்வீரர்களின் பெயர்களோடு, பி.சி.சுப்பிரமணியம் அவர்களின் பெயரும் தவிர்க்கமுடியாமல் இடம்பெறும். அவரது உழைப்பும் பங்களிப்பும் இளைய தலைமுறைக்குப் பாடமாகும்.

> “களத்தில் கொடியைத் தாங்கிய செயல்வீரர்களின் பெயர்களோடு, பி.சி.சுப்பிரமணியம் அவர்களின் பெயரும் தவிர்க்கமுடியாமல் இடம்பெறும். அவரது உழைப்பும் பங்களிப்பும் இளையதலைமுறைக்குப் பாடமாகும்.”

...துடிக்கும்

---

## மதச்சார்பின்மையைக் கைவிடும் அரசு?

தமிழ்நாடு அரசு, மதச்சார்பற்ற தன்மையைக் கைவிட்டு வருவது, ஆபத்தான போக்கு என்றும், அரசியலமைப்புச் சட்டத்தினை மீறிவருவதாகவும், சமூக வலைதளங்களில் விவாதங்கள் நடக்கின்றன. நிதி அமைச்சர் பட்ஜெட் தாக்கல் செய்ய வரும்போது, ஜெப மாலையுடன் வந்தார். அதற்கு முன்பு, வேளாண் பட்ஜெட்டை அந்தத் துறை அமைச்சர் திருப்பதி கோயிலுக்கு எடுத்துச்சென்று வழிபட்டு வந்தார். தவிர, முதல்வர் அறையில் சிலுவை ஏசு சிலை வைத்துள்ளார். முஸ்லிம் லீக் எம்.எல்.ஏ. அமைச்சரான போது, அவரது அலுவலகத்தில், இஸ்லாமியச் சடங்குகள் செய்யப்பட்டன. இந்தச் செயல்கள், சமூக வலைதளங்களில் பேசுபொருளாகியுள்ளன.

இவற்றையெல்லாம் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? எனக் கேள்வி எழுப்பியுள்ளார், மருத்துவர் ஷர்மிளா.

மதச்சார்பின்மை என்பதன் அர்த்தத்தை த.வெ.க.வினர் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். மதச்சார்பின்மை என்பது எந்த மதத்துக்கும் சார்பற்று இருப்பதுதான். அதுதான் அடிப்படை. மதப்பெரும்பான்மைவாதம் இருக்கும் நாட்டில், அரசியல்ரீதியாக சில சில விஷயங்களில் சிறுபான்மையினருக்கு ஆதரவாக அரசு இருக்கலாம். அது நியாயமான காரணங்களுக்கு மட்டும்தான் பொருந்தும். ஆனால், அந்த ஆதரவை அனைத்து மக்களுக்குமான செயல்பாடுகளில் தங்கள் நம்பிக்கையைப் புகுத்துவதற்கு அல்ல. அரசு மதச்சார்பின்மையைத் தவறாகப் பயன்படுத்தி கெடுத்துவிடக் கூடாது.

பேரறிஞர் அண்ணா முதல்வராக இருந்தபோது, ‘அரசு அலுவலகங்களில் கடவுள் படம் கூடாது’ என உத்தரவிட்டார். காரணம், அரசு என்பது பொதுவானது. அங்கு எந்தக் கடவுள் படங்களோ குறியீடுகளோ இருக்கக் கூடாது. தனிப்பட்ட முறையில் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம். ஆனால், அரசின் பிரதிநிதியாக இருப்பவர், அந்த வேலையில் இருக்கும்போது எதுவும் செய்யக்கூடாது. அது எந்த மதத்தினராக இருந்தாலும் சரி. குறிப்பாக, மதச்சார்பின்மை என்பது சிறுபான்மையினருக்கும் பொருந்தும் எனப் பலரும் விவாதித்துவருகின்றனர்.

---

## ஃப்ளாஷ்பேக்



டி.அண்ணாதுரை



### ‘முரசொலி’ அலுவலகத்தில் வாழ்த்து!

2017-ஆம் ஆண்டு, எனது பிறந்தநாள் அன்று ‘முரசொலி பவள விழா’ காட்சி அரங்கத்தைப் பார்வையிட ‘முரசொலி’ அலுவலகத்திற்குச் சென்று இருந்தேன். அங்கு, இன்றைய கழகத் தலைவர் அவர்கள் வருகைதந்த நேரத்தில், அவரிடம் பிறந்தநாள் வாழ்த்துகள் பெற்றது கூடுதல் மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் அளித்தது. இந்தப் புகைப்படம் என்றும் எங்கள் இல்லத்தை அலங்கரிக்கும் மதிப்புக்குரிய படம்.

– டி.அண்ணாதுரை, பூலாம்பாடி,
ஒன்றியத் துணைச் செயலாளர்,
நல்லூர் வடக்கு, கடலூர் மேற்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

---

## நல்வரும்

### ‘நம்நாடு’ இதழுக்கு விளம்பரம்!

1957-ஆம் ஆண்டு தேர்தலில் கழகம் வெற்றி பெற்றதற்குப் பின்னர்தான், தமிழ்நாட்டில் பத்திரிகைகளும் தி.மு.க.வின் கருத்துகளை, செய்திகளைப் பதிவுசெய்தனர். கழகம் சட்டமன்றத்தில் நுழைந்து பணியாற்றிய பின்னர், ‘ஆனந்த விகடன்’ இதழ், ‘இந்த வாரம் ஆனந்த விகடன் வாசித்தீர்களா?’ என்கிற விளம்பரத்தை, தி.மு.கழகத்தின் அதிகாரபூர்வமான நாளேடான ‘நம்நாடு’ இதழுக்குத் தரத் தொடங்கியது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900